


August 2020 Issue 3 Editor ; VM Thevarajan

# நாம் நாமாகவே இருப்போம்.

எந்தச் சிங்கமும் தனக்கு வயதாகிவிட்டது என்று தன் குட்டியிடம் சாப்பாடு கேட்பதில்லை. எந்த மாடும் படுத்துக் கொண்டு தன் கன்றிடம் தண்ணீரோ, உணவோ கேட்பதில்லை. எந்தப் பூனையோ, நாயோ படுத்த படுக்கையாக இருந்து கொண்டு மலம் கழிப்பதில்லை. மரணம் அடையும் நாள் வரை ஆரோக்கியமாக, சுயமாக தன் வேலைகள் அனைத்தையும் செய்கின்றன. மனிதர்கள் மட்டும் தான் வயதானால் நோய் வரும், இயலாமை வரும் என்று நம்பி, அடுத்தவர்களை எதிர்பார்த்து வாழ ஆரம்பிக்கிறார்கள் நன்கு ஞாபகம் வைத்துக் கொள்வோம். முதுமை என்று எதுவுமில்லை. நோய் என்று எதுவுமில்லை. இயலாமை என்று எதுவுமில்லை. எல்லாம் நமது மனதிலும் அதன் நம்பிக்கையிலும் தான் இருக்கிறது. எம் சிந்தனையை மாற்றுவோம். ஆரோக்கியமாக வாழ்வோம்.

நாம் எதை நம்புகிறோமோ அதுவாகவே ஆகிறோம். நான் சம்பாதித்தேன். நான் காப்பாற்றினேன். நான் வீடு கட்டினேன். நான் பெரியவன். இப்படி நான் நான் நான் என்று மார் தட்டிக் கொள்ளுகிறோம். நான் தான் என் இதயத்தை இயக்குகிறேன் அல்லது கிட்னியை இயக்குகிறேன் என்று யாராவது சொல்ல முடியுமா? இவைகள் அனைத்தையும் எவன் செய்கிறானோ, இயக்குகிறானோ அவன் ஒருவனுக்கே நான் என்று சொல்வதற்கு அதிகாரமும் உரிமையும் உண்டு. ஆகவே நான் என்ற அகந்தையை விட்டு அனைவரிடமும் அன்பாக இருப்போம்.

உலகைப் பற்றி கவலைப்படவேண்டாம். ஏனெனில் அது இறைவனுக்குரியது. எதிர் காலத்தைப் பற்றி கவலைப்பட வேண்டாம், அதுவும் இறைவனின் கரத்தில் தான் உள்ளது. நமக்கு மேலே இருப்பவனைப் பார்த்து ஏங்க வேண்டாம். அது தாழ்வு மனப்பான்மையைக் கொண்டு வரும். நமக்கு கீழே உள்ளவனை ஏளனமாய் பார்க்க வேண்டாம். அதனால் தலைக்கனம் வரும். நம்மை யாரோடும் ஒப்பிடாமல் நாம் நாமாகவே இருப்போம். தன்னம்பிக்கை வரும்.

### துருக்கிய பழமொழி

காடுகளில் உள்ள மரங்கள் அழிந்து கொண்டே வந்தன. ஆனால் மரங்களோ மீண்டும் மீண்டும் கோடரிக்கே வாக்களித்தன. ஏனெனில் மரத்தினால் செய்யப்பட்ட தன் கைப்பிடியைக் காட்டி "நானும் உங்களில் ஒருவன் தான்" என கோடரி ஏமாற்றியதை மரங்கள் முழுமையாக நம்பின. மனதார

# இறைவா !

மிருகத்தின் கோபம் முட்டுவதோடு சரி, மனிதனின் கோபம் அன்றோடு சரி. இறைவனின் கோபம் என்று முடியுமோ…?

இறைவா….

உன் கோபத்தின் உச்சம், கோயிலை மூடினாய், மசூதியை மூடினாய், ஆலயத்தை மூடினாய், வீடுகளை மூடினாய், ஆம் உலகையே மூடினாய். உழைப்பை நிறுத்தினாய், ஊதியத்தை நிறுத்தினாய் பழகுதலை நிறுத்தினாய், ஒருவரை ஒருவர் பார்ப்பதையும் நிறுத்தினாய், மொத்தத்தில் இயக்கத்தையே நிறுத்தினாய், இறைவனே ! தவறுதான் ! ஆணவம் அடைந்தோம், கர்வத்தில் மிதந்தோம், உண்மையை மறந்தோம், நன்மையை மறந்தோம், பொதுநலம் மறந்தோம், சுயநலம் மிகுந்தோம்

தவறுதான்…!

புனிதம் துறந்தோம், மனிதம் மறந்தோம். ஊரை மறந்தோம், உறவை மறந்தோம். பெற்றோரையே மதிக்க மறந்தோம். இறைவா உன்னையே துதிக்க மறந்தோம். தவறுதான் தவறேதான், கூட்டுக்குள் முடங்கிய புழுவினைப் போல, வீட்டுக்குள் முடங்கினோம். கண்ணுக்குத் தெரியா இறைவனே ! உள்ளுக்குள் எம்மை சிறை வைத்தாயே! மண்ணுக்குள் எங்களை புதைத்தது போலே.

இறைவா….!

இது போல தண்டனையை நீ தந்ததில்லை, முந்தையர் இதுவரை கண்டதில்லை. உணர்கிறோம் கொரோனாவின் காரணத்தை உணர்கிறோம். எம் பாவத்தை மன்னித்துவிடு. உன் கோபத்தை முடித்துவிடு.

### EVERYDAY KOVID19 CHECK

At 7 p.m. open the whisky bottle and smell it. If you can smell you are not affected…..

then pour it in a glass…..

Taste it. If you can feel the taste you are definitely not affected

Dr Johnny Walker

## வீட்டில் மந்திரி சபை !

திருமணமாகி புதிதாக வீட்டுக்கு வந்த மருமகளிடம் மாமியார் சொன்னார்:

"இந்த வீட்டுக்குன்னு சில வரைமுறைகள் இருக்கும்மா. இது ஒரு அமைச்சரவை மாதிரி. இந்த வீட்டுக்கு முதல் மந்திரி உங்க மாமனார் தான். அவர் தான் பாதுகாப்புத் துறை, வெளியுறவுத் துறை எல்லாம் கவனித்துக் கொள்வார். இங்கு நான் தான் துணை முதல்வர். உள்துறை, நிதித்துறை, ஜவுளித்துறை எல்லாம் என் கட்டுப்பாட்டுக்குள் வரும். என் மகன், அதாவது உன் வீட்டுக்காரன் தான் தொழில் துறை, போக்குவரத்துத் துறை, வீட்டு வசதித் துறை எல்லாம் பார்த்துக் கொள்வான்.

என் மகள், அதாவது உன் நாத்தனார், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையும், விளையாட்டுத் துறையையும் பாத்துக்குவா.

நீ எதைப் பார்த்துக்கொள்வாய் சொல்லு? உனக்கு உணவுத்துறை, சுகாதாரத்துறை, குடும்பநலத் துறை, இவை எல்லாவற்றையும் ஒதுக்கலாம் என்றிருக்கிறேன். சரிதானா ?

சிரித்துக்கொண்டே மருமகள் சொன்னாள்: ஐயோ மாமி ! பெரிய பொறுப்பெல்லாம் எனக்கு எதுக்கு? நீங்களே எல்லா நிர்வாகத்தையும் பார்த்துக் கொள்ளுங்க, நான் எதிர்க்கட்சி

## பரம்பரை என்றால் என்ன ?

பரம்பரை என்றால் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி இவர்களுடன் ஏழு தலைமுறையினரை உள்ளடக்கியதாகும். இதில் 7வது தலைமுறையைச் சேர்ந்த தாத்தாவை பரன் என்றும் பாட்டியை பரை என்றும் அழைப்பர். இதிலிருந்து தோன்றிய பெயர் தான் பரம்பரை.

இப்போது 7 பரம்பரையைச் சேர்ந்த பாட்டா பாட்டியை நீங்கள் எப்படி அழைப்பீர்கள்? அத்தோடு அவர்கள் உங்களை என்ன உறவு முறை சொல்லி அழைக்க வேண்டும் என்பதையும் பார்ப்போம்.?

7 தலைமுறைகளின் பெயர்கள் : இப்போது உங்களுக்கு இரு குழந்தைகள் இருந்தால் அக் குழந்தைகள் இருவரும் தான் முதலாவது பரம்பரை. இவர்களின் அம்மாவும் அப்பாவும் தான் இரண்டாவது பரம்பரை. மூன்றாவது பரம்பரை பாட்டன் பாட்டி. நான்காவது பரம்பரை அவர்களின் பெற்றோரான பூட்டன், பூட்டி. ஐந்தாவது பரம்பரையான அவர்களின் அம்மா, அப்பாவை, ஓட்டன் ஓட்டி என்றழைப்போம். ஆறாவது பரம்பரையான ஓட்டன் ஓட்டியின் பெற்றோரை சேயோன், சேயோள் என்று அழைக்கவேண்டும். ஏழாவது பரம்பரையில் உள்ள தாத்தா பாட்டியை. பரன், பரை என்போம்.

இப்போது உறவு முறைகளைப்பற்றி பார்ப்போம். முதலாவது பரம்பரையான குழந்தைகளை பெற்றோர் மகன், மகள் என்று கூப்பிடுவார்கள். பாட்டன் பாட்டிக்கு அவர்கள் பெயரன் (பேரன்), பெயர்த்தி (பேத்தி). பூட்டன் பூட்டிக்கு கொள்ளு பேரன், கொள்ளு பேத்தி. ஓட்டன் ஓட்டிக்கு அவர்கள் எள்ளு பேரன், எள்ளு பேத்தி.

இத்தனை உறவு முறைகள் வேறெந்த மொழியிலுமில்லை. இது தமிழுக்கே உரித்தான தனிச் சிறப்பு.

## வெற்றி நிச்சயம்

என்றாவது உங்கள் நேரம் முடிந்துவிட்டது என சிந்தித்துள்ளீர்களா? இதற்கு மேல் எந்த வெற்றியும் கிடையாது என தளர்ந்துள்ளீர்களா?

**Obama** ஓய்வு பெறும்போது அவரது வயது 55. ஆனால் **Trump** பதவி ஏற்கும்போது அவரது வயது 70. தனது 35வது வயது வரை வெறும் 10 டாலர்கள் சம்பளமாகப் பெற்றவர் **Jack Ma. Warren Buffet** வணிகத்தை ஆரம்பிக்கும் போது அவருக்கு வயது 11. ஆனால் **Colonel Sanders** தனது 65 வயதிலேயே **KFC** யினை ஆரம்பித்தார். தனது 30 வயது வரை உணவிற்கே வழியில்லாமல் இருந்தார் **Harry Potter** நூலை எழுதிய **J.K. Rowling. Mark Zuckerberg** தமது 23 ஆவது வயதிலேயே பல கோடிகளுக்கு அதிபதியானார். ஆனால் **Henry Ford** தனது 45 வயதுவரை வெறும் தோல்விகளை மட்டுமே சந்தித்தார். வெற்றிக்கு வயது கிடையாது. நீங்கள் பந்தயத்தில் ஓடவில்லை. ஒரு தனி வழியில் பயணிக்கின்றீர்கள். எனவே மனமுடைந்து போகாதீர்கள். முயற்சியைக் கைவிடாதீர்கள். நேரம் வரும்போது நிச்சயம் வெற்றி உங்களை வந்தடையும். உங்கள் கவலைகள் மறையும்.

கொரோனாவும் மனைவியும் !
கொரோனா போல் தான் மனைவியும். ஆரம்பத்தில் அவளை எம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கிறோம். பின் அது முடியாதென்பதை உணர்ந்து அதனுடனேயே வாழ கற்றுக்கொள்கிறோம்.

# குடும்பத்தில் புரிதல் !

அவள் கணவனும் கணவனின் நண்பரும் சாப்பிட அமர்கிறார்கள்.

அடுப்பறையில் இருப்பது 12 இட்லிகள்தான் என்பதை எப்படி கணவனுக்கு தெரிவிப்பது என்று குழம்பிய நிலையிலேயே இரண்டு தட்டுகளை எடுத்து வந்து கணவனுக்கும் அவனுடைய நண்பனுக்கும் வைத்து அதில் ஆளுக்கு நாலு இட்லியை வைத்தாள். மீதம் இருப்பது நாலு மட்டுமே என மனதுக்குள் படபடப்போடு கணக்கு போட்டுக் கொள்கிறாள்.

வைத்த வேகத்தில் நான்கு இட்லிகளையும் கணவன் வேகவேகமாக சாப்பிட்டுவிட பதற்றம் கொண்டவளாய் இரண்டு இட்லியை எடுத்து கணவனுக்கு வைப்பதற்காக குனியும் வேளையில் கணவன் சொன்னான் "எனக்கு போதும் நாலு இட்லிக்கு மேலேயா சாப்பிடுவது?" என்று. அருகில் ரசித்து ருசித்து இன்னும் சில இட்லிகள் சாப்பிடலாம் என எதிர்பார்த்திருந்த விருந்தாளி நண்பனுக்கோ வெடுக்கென்று ஆனது. அந்த நேரத்தில் "அண்ணா உங்களுக்கு ?" என கணவனின் நண்பனைக் கேட்க அவன் "போதும் போதும் நான் எப்போதுமே மூன்று இட்லிதான் சாப்பிடுவேன். இன்று உங்கள் கைப்பக்குவம் நான்கு இட்லிகளை சாப்பிட்டுவிட்டேன்" என்று கூறி எழுந்தான் அந்த விருந்தாளி நண்பன்.

கைகழுவ செல்லுகையில் மனைவியைத் தாண்டும்போது "மீதமுள்ள நான்கை நீ சாப்பிட்டுவிடு" என்று கணவன் சொல்ல, தன் இதயத்தில் மட்டுமல்ல தான் சமைத்த பாத்திரத்தில் கூட எத்தனை இட்லிகள் இருக்கின்றன என்பதை பார்க்காமலே தன் பர்வையைக் கொண்டே கணக்கிட்டுக் கொண்டதோடு அந்த இக்கட்டில் இருந்தும் அழகாக தன்னை காத்திட்ட தன் கணவனை நினைத்து ஆச்சரியப்பட்டு மகிழ்ந்தாள் அந்தப் பெண்.

அன்பு நண்பர்களே !

இந்தக் கதையில் நாம் பார்த்த இரு மனங்களின் புரிந்துகொள்ளுதல் ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா. இந்தப் புரிதல் இல்லாத குடும்ப வாழ்வில் எவ்வளவு ஆசீர்வாதங்கள் இருந்தாலும் மகிழ்ச்சியும், திருப்தியும் இருக்கவே இருக்காது.

**முன் நாள் தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்களின் தனிப்பட்ட குறிப்பிலிருந்து ஒரு சிறப்பான கதை.**

நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின், ஒரு நாள் என் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலரை என்னுடன் ஓர் நகர சுற்றுலாவுக்கும் அதன் பின் நல்லதொரு உணவகத்தில் உணவருந்தவும் என அழைத்துக் கொண்டு சென்றேன். நகர மையத்தில் உள்ள அந்த உணவகத்தில் உணவை "ஓடர்" செய்துவிட்டு காத்திருந்தோம். சில நிமிடத்தில் நாம் "ஓடர்' செய்த உணவு எங்கள் மேசைக்கு வந்தது. அப்போது எங்கள் மேசைக்கு முன்னால் இருந்த மேசையில் ஒருவன் தனித்திருந்து உணவருந்துவதை கவனித்துவிட்டு அவனை எங்களுடன் வந்து அமர்ந்திருந்து உணவை அருந்தச் சொல்லு என்று என் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரிடம் சொன்னேன். அவனும் அப்படியே சென்று சொன்னவுடன் அவன் தன் "பிளேற்றை" யும் கொண்டு வந்து என் அருகில் அமர்ந்து கொண்டு தன் உணவை உண்ணத் தொடங்கினான். அவனின் கைகள் நடுங்கிய படியே சாப்பாட்டை சாப்பிட்டு முடித்துவிட்டு எழுந்து சென்றுவிட்டான். அவன் போன பின் என் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்னிடம் கூறினான் "அவன் ஒரு நோயாளி போல் தெரிகிறது அவன் கைகளைப் பார்த்தீர்களா ? நடுங்கியபடியே சாப்பிட்டானே" என்றான்.

மண்டேலா சொன்னார்: "இல்லை அப்படி இல்லை. இவன் தான் நான் சிறையில் இருந்த போது அங்கு கடமையில் இருந்த சிறைக் காவல் அதிகாரி. என்னை சித்திரவதை செய்யும் போது நான் அலறி கொஞ்சம் தண்ணீர் கேட்பேன். ஒவ்வொரு முறையும் இதே ஆள் தான் வந்து என் தலையில் சிறுநீர் கழித்துவிட்டு 'குடி' என்று சொல்லுவான். நான் இப்போது ஜனாதிபதியாக இருப்பதால் தன்னை சிறையில் அடைத்து அதே போன்று சித்திரவதை செய்யப் படுவேனோ என்று பயந்து தான் அவன் கைகள் நடுங்கியது."என்றார்.

"ஆனால் அப்படிச் செய்வது என் சுபாவமல்ல. பழி வாங்கும் தன்மை நாடுகளை அழித்துவிடும். ஆனால் சகிப்புத் தன்மை நாடுகளை சிறப்பானதாக உருவாக்கும்." என்றார். இது குடும்பங்களுக்கும் பொருந்தும். பலவீனமானவனால் மன்னிக்க இயலாது. மன்னிக்கும் தன்மை என்பது மனோபலம் வாய்ந்த பலவான்களின் பண்பாகும் என்றார் அந்த மா மனிதர்.

## 8

**ஓர் எட்டில் வளர்க்காத பிள்ளையும்,**
**ஈரெட்டில் கற்காத கல்வியும்,**
**மூவெட்டில் முடியாத திருமணமும்,**
**நாலெட்டில் பெறாத பிள்ளையும்,**
**ஐயெட்டில் சேர்க்காத செல்வமும்,**
**ஆறெட்டில் தேடாத புகழும்,**
**ஏழெட்டில் சுற்றாத தேசமும்,**
**எட்டெட்டில் கிடைக்காத ஓய்வும். பயனில்லை**

## திருமணமான பெண் தன் தாய்க்கு எழுதிய கடிதம்:-

அன்புள்ள அம்மா,

எல்லா பெண்களைப் போலவே கல்யாணக் கனவில் களித்து மனதைக் கொள்ளையடித்தவரை உங்கள் சம்மதத்துடன் குதூகலமாக, ஆடம்பரமாக, திருமணம் புரிந்து கொண்டேன். பின்னர் தான் தெரிந்தது, வாழ்க்கை சினிமாவில் போடும் "சுபம்" க்கு பின்பு தான் தொடங்குகிறதென்று. வாழ்க்கையில் விரும்புவது, விரும்பப்படுவதென்பதையும் தாண்டி நிறைய இருக்கிறது என்று தெரிய வருகிறது. எத்தனை பொறுப்புகள், எத்தனை சுமைகள், எத்தனை எதிர்பார்ப்புகள், எத்தனை தியாகங்கள், எத்தனை ஏமாற்றங்கள். நினைத்த நேரத்தில் நிம்மதியாக முழுத் தூக்கம் கலைந்த நேரத்தில் எழுந்திருக்க முடியவில்லை.

குடும்பத்தில் மற்றவர் விழிக்கும் முன் நான் விழித்து என் வேலைகளை ஆரம்பிக்க வேண்டியிருக்கு. உன்னோடு இருந்த நாட்களில் எனக்கென்ற விருப்பமான உடைகளில் சிட்டாக பறந்து கொண்டிருந்தேன்... இங்கே அவர்கள் விரும்பிய உடையில் வலம் வருவதையே விரும்புகின்றனர். இதோ என் தோழியைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று உன்னிடம் சொல்லிவிட்டுச் சென்றது போல் சொல்லிச் செல்ல இயலவில்லை. என் தேவைகளை விட அடுத்தவர் தேவைகளை முன் வைத்தே நான் நடந்து கொள்ள வேண்டி இருக்கு. நினைத்த நேரத்தில் தூங்கக் கூட முடிவதில்லை. எனக்கு விருப்பமான 'ரிவீ' நிகழ்ச்சியைக் கூட பார்க்க முடிவதில்லை. சில நேரங்களில் எதற்கு இந்த திருமணம் என்று அலுப்பாக இருக்கிறது. இந்த திருமணம் என் சுதந்திரத்தை அல்லவா பறித்துவிட்டது. என் சுயத்தை அல்லவா சூறையாடிவிட்டது. உன்னிடம் இருந்த போது மிக மகிழ்வாக இருந்தேனே! உன்னிடம் திரும்ப வந்து படுத்து கொள்ளணும் போல இருக்கிறது அம்மா. வேண்டாம் வேண்டாம் என்று நான் சொல்ல சொல்ல

ஒரே ஒரு இட்லி போட்டுக்கோ... உனக்கு பிடிக்குமேன்னு பாயாசம் செய்தேன் என்று நீ பின்னாலேயே வந்து வந்து ஊட்டி விடுவதை நினைக்க, உன்னை கொஞ்சிக் கொள்ள வேண்டும் போலிருக்கிறது. எந்தக் கவலையும் இல்லாமல் உன் அரவணைப்பில் உன் கொஞ்சலில், உன் பாதுகாப்பிலேயே இருந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது.

ஆனால் அடுத்த கணமே, நீயும் என் வயதில் என்னை மாதிரி தானே உணர்ந்திருப்பாய். நீ உன் திருமணத்தில் செய்த தியாகங்கள் தானே எனக்கு இந்த அழகிய நினைவுகளைக் கொடுத்திருக்கிறது... நீ அன்று நான் இன்று நினைப்பது போல் நினைத்திருந்தால் நான் இன்று இருப்பேனா? நீ செய்த தியாகங்களையும் உழைப்பையும் பாசத்தையும் எதிர்பாரா அன்பையும் நான் திருப்பித் தர வேண்டாமா... என்று நினைத்துக் கொள்கிறேன். அதுவும் உன்னிடம் இருந்து கற்றதுதான். அப்படி நினைக்கும் போது வாழ்க்கையே எளிதாக தெரிகிறது. தெளிவாக புரிகிறது. காலம் செல்ல செல்ல நீ உன் குடும்பத்தை நேசித்தது போல் நானும் என் குடும்பத்தை நேசிக்க ஆரம்பித்து விடுவேன். நீ செய்த தியாகங்களை நானும் செய்ய தயாராகி விடுவேன்.

உனக்கு நாங்கள் கொடுத்த மன உறுதியை, திடத்தை என் குடும்பமும் எனக்கு தரும். ஆமாம் அம்மா நீ எனக்கு கொடுத்ததை நானும் என் குடும்பத்துக்கு கொடுக்க தயாராகிவிட்டேன்.

நன்றி அம்மா.

என்றும் பாசமுள்ள உன்,

### லொக்டவுன்லை இப்பிடியும் பிரச்சினை !

கணவன் : வீடு முழுக்க தேடியாச்சு, நீங்கள் இங்கே கண்ணாடியைப் பார்த்துக் கொண்டிருக்கிறியள். சரி சரி வெளிக்கிடுங்கோ ஒருக்கால் கங்கா வீட்டை போக வேணும் பிள்ளைப் பெத்து பாக்க.

மனைவி: நான் ஒரு இடமும் வரமாட்டன் என்னைக் கேளாதையுங்கோ. நான் நான்கு மாதமாய் வெளிக்கிடேல்லை.

கணவன் - இப்ப ஏன் வரமாட்டன் என்கிறியள் ? கங்கா எங்களுக்கு என்ன சுகயீனம் என்றாலும் குடும்பத்தோட வாற பிள்ளை.

மனைவி – அவ ஒவ்வொரு வருஷமும் தானே பெறுகிறா. நாலு வருஷம் போயாச்சு இனிமேல் வேண்டாம். நான் வரமாட்டன் அவ்வளவு தான்.

கணவன் - ஏன் வர இயலாது ஒரு காரணம் சொல்லுங்கோ பாப்பம்.

மனைவி – சரி உண்மையை சொல்லுறன். நான் இந்த மூஞ்சையோட எப்பிடி வாறது. **Beauty Parlour** எல்லாம் பூட்டு. தலைக்கு **Dye** போடேல்லை. **Facial** செய்யேல்லை, **Eyebrow shape** பண்ண வழியில்லை. நான் சத்தியமாய் வரமாட்டன்.

கணவன் – அட அது தானே றோட்டிலை ஒரு பொம்பிளையளையும் காணன் !!!

### *6ம் பக்க புதிருக்கு விடை*

1. மற்றக் காலையும் தூக்கினால் தான் கீழே விழுந்து விடுவேன் என்று கொக்குக்கு தெரியும்.
2. சேகர்.
3. எவரெஸ்ற் தான் எப்போதுமே உயர்ந்த மலை.
4. அவர் பெயர் எப்போதுமே ஸ்கொட் மொறிசன் தான்.
5. இரண்டாம் இடம்.

## *அனுபவத்தின் மேன்மை*

முன்னொரு காலத்தில் ஜப்பான் நாட்டில் சட்டம் ஒன்று நடைமுறையில் இருந்தது. அதாவது, வேலை செய்ய முடியாத முதுமைப் பருவத்தினை அடையும் வயதானவர்களை தூக்கிச் சென்று மலைப்பகுதியில் விட்டு விட வேண்டும். இதனால் வயதானவர்களைப் பராமரிக்க வேண்டிய சுமை நாட்டு மக்களுக்கு இல்லை என்பது அரசனின் எண்ணம்.

அந்தச் சட்டம் நடைமுறையில் இருந்த போது ஒரு தந்தையும் மகனும் ஒருவரிடம் ஒருவர் மிகுந்த அன்பு கொண்டவர்களாக விளங்கினர். நாளடைவில் அந்தத் தந்தை வேலை செய்ய இயலாத முதுமைப் பருவத்தை அடைந்தார். ஆதலால் அந்நாட்டின் சட்டப்படி அவரை மகன் மலைப் பகுதியில் கொண்டு விட்டு விட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளானான். தந்தையைப் பிரிய அவனுக்கு மனமே வரவில்லை. எனினும் அரச தண்டனைக்குப் பயந்து அவன் தன்னுடைய தந்தையை மலைப் பகுதிக்கு முதுகில் சுமந்து சென்றான். மலைப் பகுதியை அடைந்தபோது அவனுடைய மனம் மிகவும் வருந்தியது. ஆதலால் அவன் தந்தையை தன்னுடனே அழைத்துக் கொண்டு திரும்பி வீட்டுக்கு வந்து விட்டான். வீட்டின் பின்பகுதியில் தந்தையை யாருக்கும் தெரியாமல் மறைத்து வைத்தான். மிகவும் ரகசியமாக அவருக்கு உணவளித்து வந்தான்.

### சாம்பல் கயிறு

ஒரு நாள் அரசன், தன் மக்களின் அறிவுத் திறனை சோதிக்க எண்ணி போட்டி ஒன்றை அறிவித்தான். சாம்பலால் திரிக்கப்பட்ட கயிற்றினை கொண்டு வர வேண்டும் என்பதே அப்போட்டியாகும். போட்டியைக் கேட்டதும் எல்லோரும் சாம்பலால் எவ்வாறு கயிறு திரிக்க இயலும் என்று எண்ணினர். அரசனின் போட்டி பற்றி அந்த மகன் தந்தையிடம் தெரிவித்தான். போட்டியைக் கேட்ட தந்தை, மகனிடம் பெரிய தாம்பாளத்தில் கயிற்றினை முறுக்கி வைத்து அதனை எரியச் செய்தால் சாம்பலால் திரித்த கயிறு கிடைக்கும் என்றார். மகனும் தந்தை கூறியபடி தாம்பாளத்தில் கயிற்றினை வைத்து எரித்தான். கயிறு எரிந்து சாம்பலான பின்பும் அதே கயிறு வடிவில் இருந்தது. இதனை அரசனிடம் காண்பித்து பரிசினைப் பெற்றான்.

### அடி எது நுனி எது?

ஒரு மாதம் கழித்து அரசன் இரண்டாவது போட்டியை அறிவித்தான். அரசன் ஒரு மரக் கொம்பைக் கொடுத்து இதனுடைய அடிப் பாகம் மற்றும் நுனிப் பாகத்தைக் கண்டு பிடிக்குமாறு மக்களுக்கு ஆணையிட்டான். கிட்டத்தட்ட இரு பகுதியும் ஒன்றாகத் தெரிந்ததால் யாராலும் அடி எது நுனி எது என்று சொல்ல முடியவில்லை. மரக்கொம்பை வீட்டுக்கு எடுத்து வந்த மகன் தந்தையிடம் காண்பித்து அரசனின் கேள்வியைக் கேட்டான். தந்தை மரக் கொம்பை தண்ணீரில்

### **தட்டாமல் ஒலி எழுப்பும் மேளம்**

**அரசன் மூன்றாவது போட்டியை மிகவும் கடுமையானதாக வைத்தான். அதாவது தட்டாமல் ஒலி எழுப்பும் மேளம் ஒன்றினைத் தயார் செய்து வருமாறு மக்களிடம் கூறினான்.**

**வழக்கம் போலவே எல்லா மக்களும் பின்வாங்கி விட்டனர். அரசனின் கேள்வியால் மகன் மிகவும் சோர்ந்து தந்தையிடம் வந்து நடந்ததைக் கூறினான். தந்தை அவனிடம் மேளத்திற்கு தேவையான தோல்களை எடுத்துக் கொள். மலைப் பகுதிக்குச் சென்று தேனீக்கூடு ஒன்று கொண்டு வா. அதனை உள்ளே வைத்து மேளத்தைத் தயார் செய் என்றார்.**
**மகனும் தந்தை கூறியவாறே மேளத்தை தயார் செய்து அதனை அசைக்காமல் கொண்டு சென்று அரசனிடம் தந்தான். அரசன் மேளத்தை கையில் எடுத்து மேளத்தை அசைத்தான். மேளத்திற்குள் உள்ளே இருந்த தேனீக்கள் அசைவினால் மேளத்துக்குள் இங்கும் அங்கும் பறந்தன. இதனால் தட்டாமல் ஒலி உண்டானது. இதனைக் கண்டு ஆச்சரியமடைந்த அரசன் "உன்னால் எப்படி மூன்று கேள்விகளுக்கும் சரியான விடைகளை செய்து காண்பிக்க முடிந்தது" என்று கேட்டான்.**

### **அனுபவம் தந்த பதில்கள்**

**"அரசே உங்களுடைய கேள்விகளுக்கு விடை காணும் அளவுக்கு எனக்கு அனுபவம் கிடையாது. என்னுடைய வயதான தந்தை என்னுடன் இருக்கிறார். அவர் மூலமே எனக்குத் தங்களின் கேள்விக்கான பதில் கிடைத்தது" என்று கூறினான். இளைஞனின் பதில் அரசனை நெகிழச் செய்தது. சிக்கலான பிரச்சினைகளைத் தீர்வு செய்ய வயதானவர்களின் அனுபவம் உதவியாக இருக்கும் என்பதை அரசன் உணர்ந்து கொண்டான்.**

**உடனே அவன் "இனி வேலை செய்ய இயலாத வயதானவர்களை மலைப்பகுதிக்கு கொண்டு போய் விடத் தேவையில்லை" என்று உத்தரவு போட்டான். அன்று முதல் வயதானவர்கள் தங்கள் கடைசிக் காலத்தைப் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக கழித்தனர். ஆம் அனுபவ அறிவு என்றைக்கும் விலை மதிப்பில்லாதது என்பதை இக்கதைகள் மூலம் அறியலாம்.**

**வயதான பெரியவர்கள் வீட்டில் இருப்பதே நமக்கு இறைவன் கொடுத்த வரம் என்று உணர்வோம். நம்மை ஆளாக்கிய பெற்றோரின் வயதான காலத்தில் அவர்கள் நம்மோடு இருப்பதும் அவர்களைப் பராமரிப்பதும் நமக்கான கடமை மட்டுமல்ல நமக்கு கிடைத்த அருள் என்று உணர்வோம். தொப்புள் கொடியிலிருந்தே தொடங்கிய தாயும், மார்பிலும் தோளிலும் தூக்கிச் சுமந்து கால் தேய உழைத்து நம்மை உருவாக்கிய தந்தையும் நம்மிடம் நன்றியை எதிர்பார்க்கவில்லை என்றாலும் எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு**

## ஆயுள் தண்டனை

**ஜெயபாரதன் கனடா**

முதுமையின் வெகுமதி இதுதான்
ஊழ்விதித் தண்டனை இதுதான்
இளமை விடை பெற்றது எப்போது?
முதுமை உடலுள் புகுந்தது எப்போது?
முடி நரைத்து எச்சரிக்கை விடுகிறது !
மூப்பு முதிருது, மூச்சு திணருது.
நாக்கு பிறழுது, வாக்கு தடுமாறுது.
கால் தயங்குது, கை ஆடுது,
கண்ணொளி மங்குது. காதொலி குன்றுது.
குனிந்தால், நிமிர முடியவில்லை
நிமிர்ந்தால் குனிய முடியவில்லை
உடல் நிமிர்ப்பு குன்றிப்போய்
புவி ஈர்ப்பு மிஞ்சிப் போய்
முதுகு கூன் விழுது

ஓய்வகக் காப்பு மாளிகையில்
தள்ள நேரிடும் தருணம் இதுதான்!
முதியோருக்கு
ஆயுள் தண்டனை இதுதான்!
குடும்பத்தில் தம்பதியர் இருவரும்
அனுதினம் பணம் சம்பாதிக்கப் போகும்
கட்டாய நிலை
காலை எழுந்தால் கண்ணொளி மங்கும்
சேவல் கூவல் செவிதனில் நழுவும்
கால்கள் தள்ளாடும், இரவா, பகலா,
சனியா, புதனா காலையா மாலையா
ஜுனா, ஜுலையா
நினைவில் வர சற்று நேரம் எடுக்குது!
மங்குது கண்ணொளி விக்குது சொல்லொலி.
திக்குது வாயிதழ், சுருங்குது நடை
திரும்ப இயலாது உடனே

உடல் தளர்ச்சி, முடக்குது உடம்பை.
ஈழ விடுதலைப் போராட்டம்
பற்றிக் கூற வீட்டில் பேரன் பேத்திகட்குத்
தாத்தா தேவை.
பேரன்பு ஊட்ட வீட்டில் பாட்டி தேவை.
ஓயும் முதியோர் தனிமையில் ஒதுக்கப்பட்டு
ஆயுள் மட்டும் நீள்கிறது,
அன்பூட்டும் வாய்ப்பில்லாது!

## விலகி நில் !

மகாபாரதத்தில் ஒரு கதை.

குருஷேத்திர யுத்தம் முடிந்து அர்ஜுனன் மகிழ்ச்சியுடன் இருக்கிறான். அப்போது அவனை கிருஷ்ணன் அழைத்து "அர்ஜுனா என்னைப் பார்க்க யாதவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் திரும்பிப் போகும் வழியில் அவர்களை திருடர்கள் தாக்கக்கூடும். எனவே அவர்களை காட்டுப் பாதைக்கு அப்பால் கொண்டு போய் விட்டு வா" என்று கூறினான். கண்ணனுக்காக மறுக்க முடியாமல் அவனும் யாதவர்களுடன் போகிறான். அதே போல் வழியில் திருடர்கள் இவர்களை தாக்கி கொள்ளையிட வருகிறார்கள். அர்ஜுனனும் அலட்சியமாக இவர்கள் யார் என்னுடன் சண்டையிட. என்று தன் காண்டிபத்தை எடுத்து அம்புகளை அவர்களை நோக்கி எய்தான். ஆனால் ஒரு அம்பு தானும் அவர்கள் மேல் படவில்லை. ஐயோ எனக்கு என்ன ஆயிற்று என்று அர்ஜுனன் அதிர்ச்சியுற்றான், அப்படியே சோர்ந்து போனான். அப்போ அந்த இடத்துக்கு குதிரையில் கண்ணன் வந்து தன் வில்லினால் அம்புகளை எய்து திருடர்களை விரட்டிவிட்டான். அப்போது அர்ஜுனன் அழுது கொண்டிருந்தான். கண்ணன் "ஏன் அர்ஜுனா அழுகின்றாய் என்ன நடந்தது" என்று வினவ அர்ஜுனன் "கண்ணா என் கைகளுக்கு என்ன ஆயிற்று? மகாபாரத யுத்தத்தை வென்ற எனக்கு இப்போ எல்லா அம்புகளும் குறி தவறிவிட்டதே. இது எப்படி நடந்தது?" என்றான். அதற்கு கண்ணன் சொன்னான் " உன் நேரம் முடிந்தது. யுத்தத்தில் இருந்த உன் ஆற்றல் உனதல்ல. அது உனக்கு கொடுக்கப்பட்டது. இப்போது நீ விலகி நில்" என்றான்.

இந்த கட்டத்துக்கு நாம் எல்லோரும் ஒரு நாள் வந்து தான் ஆகவேண்டும். உங்களுடைய கடமைகள் முடிந்து விலகி நிற்கவேண்டிய காலம் வரும். அப்போது விலகி நில்லுங்கள். வீட்டுப் பொறுப்பு மருமகளிடம் போன பின்பு எந்த விடயமானாலும் அவள் பாடு உங்கள் மகன் பாடு, என்று விலகி நில்லுங்கள். மகன் ஒரு விடயத்தில் ஒரு முடிவை எடுக்கிறானென்றால் "நாங்களெல்லாம் அந்தக் காலத்தில் அப்பா பேச்சைக் கேட்டுத் தான்

**4 ம் பக்கத்தில் உள்ள விடைகளை பார்க்காது உங்களால் விடை கூற முடியுமா?**

1. கொக்கு ஏன் ஒற்றைக் காலில் நிற்கின்றது ?
2. சேகரின் தாய்க்கு 3 பிள்ளைகள். மூத்தவள் பெயர் சித்திரை, இரண்டாமவன் வைகாசி எனின் மூன்றாமவன் பெயர் என்ன ?
3. எவரெஸ்ட் கண்டு பிடிக்கப்பட முன்னர் உலகின் மிக உயர்ந்த மலை எதுவாக இருந்திருக்கும்.
4. 1980ல் பிரதம மந்திரியின் பெயர் என்ன ?
5. நீங்கள் ஒரு ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொள்கிறீர்கள். அப் பந்தயத்தில் இரண்டாவதாக ஓடி வருபவரை நீங்கள் முந்திவிட்டீர்கள். இப்போது பந்தயத்தில் உங்கள் இடம் எது?

